# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 70/2022 LW– 1 PW– 1

Name : சுரேஷ் ( புகார்தாரர்)

Father's/Husband's Name : முத்தழகு

Village : பன்னியாமலை

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 45/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி ஜெயச்சந்திரன் என்பவரை தெரியும். கடந்த 07.05.2020ம் தேதி இரவு 10.30 மணியளவில் என் வீட்டில் நான் இருந்தபோது, முன் பகையை மனதில் கொண்டு ஆஜர் எதிரி அவரது மாமா ராஜா என்பவரின் தூண்டுதலின் பேரில் அத்துமீறி என் வீட்டிற்குள் நுழைந்து குடித்துவிட்டு வந்து கோத்தா, கொம்மா, தேவிடியா மகளே என அசிங்கமாக பேசி சூரி கத்தியால் என்னை முதுகில் குத்தினார். தப்பிக்க முயன்றபோது நான் அணிந்திருந்த பனியன் கிழிந்து முதுகில் ரத்தக் காயமும், சிராய்ப்பு காயமும் ஏற்பட்டிருந்தது. நான் அவரிடமிருந்து தப்பித்து நத்தம் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டேன். மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்ட பின்னர் நத்தம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது

தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u> :

2) நான் ஆறாம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகார் மனுவை நான் தான் எழுதினேன். தற்போது சாட்சி புகார் மனுவில் கையொப்பம் மட்டும் செய்ததாக தெரிவித்தார். புகார் மனுவை யார் எழுதினார் என்றால் நான் மருத்துவமனையில் இருந்தபோது திருமலை என்பவர் புகாரை எழுதி கொண்டு வந்து கையொப்பம் வாங்கினார். புகார் மனுவை திருமலை எழுதினாரா என்றால் இல்லை, புகார் மனுவை யார் எழுதினார் என்று எனக்கு தெரியாது. திருமலை என்பவரை விசாரித்தால்தான் புகார் மனுவை யார் எழுதினார்கள் என்று தெரியவரும் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள செல்போன் எண் என்னுடையதுதான். சம்பவ தேதி அன்று இரவு முழுவதும் நான் மருத்துவமனையில் தான் இருந்தேன். மருத்துவமனையில் இருந்து சம்பவ தேதியில் இருந்து இரண்டு நாட்கள் உள் நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டு காலை வெளியே வந்தேன்.

3) எனது சகோதரர் திருமலை என்பவர் என்னிடமிருந்து புகார் மனுவை வாங்கிக் கொண்டு காவல் நிலையத்தில் அன்றைய தினமே கொடுத்தாரா அல்லது மறுநாள் கொடுத்தாரா என்று தெரியாது. எனது வீட்டின் தலைவாசல்படி தெற்கு பார்த்து உள்ளது. வீட்டிற்குள் நுழைந்தவுடன் ஹால், அதற்கு அடுத்து ஒரு அறை, அதற்கு அடுத்து ஒரு அறை உள்ளது. வீடானது தலைவாசலில் இருந்து முடிவு வரை ஒரே நேரில் உள்ளது. எனது வீட்டிற்கு மேற்புறம் எனது அண்ணன் ஸ்ரீதர் குடி இருக்கிறார். கிழக்கே எனது அம்மா வீடு உள்ளது. சம்பவ சமயம் எனது மனைவி விஜயகுமாரி, எனது இரு மகள்கள் சுபாஷினி, பிரபாஸ்ரீ வீட்டில் இருந்தார்கள். தலைவாசல் நுழைவாயிலில் கதவு இல்லை. அதற்கு

அடுத்து உள்ள அறைக்கு தான் கதவு உள்ளது. எதிரி அந்த கதவை தட்டி தான் உள்ளே வந்தார்.

4) சம்பவ தேதி அன்று எதிரி என் மீதும் என்னுடைய சகோதரர்கள் ஸ்ரீதர், திருமலை, பிரேம், வெண்ணிலா, பழனிச்சாமி, ராஜேந்திரன், கருத்தழகு ஆகியோர் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி புகாரின் மீது நீதிமன்றத்தில் சி.சி.எண். 100/2023 என்ற வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். சம்பவ தேதியான 07.05.2020 அன்று இரவு 10.00 மணிக்கு பன்னியாமலையில் இருந்து எதிரியும், அவரது அப்பா குருசாமியும் அவர்களது இருசக்கர வாகனத்தில் ஊருக்கு மேற்கே உள்ள தோட்டத்திற்கு போகும் வழியில் நானும், எனது சகோதரர் பிரேம், ஸ்ரீதர் மூவரும் சேர்ந்து தடியால் எதிரியை தலையில் தாக்கி இரத்தக் காயத்தை ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல.

5) எதிரியை மருத்துவமனையில் சேர்க்க டாடா சுமோ வண்டியில் எதிரியின் மாமா மற்றும் பெற்றோர் எதிரியை அழைத்து சென்றபோது வாகனத்தை இடையில் நிறுத்தி வாகனத்தையும் தாக்கி சேதப்படுத்தி அதிலிருந்து தப்பித்து அரசு மருத்துவமனைக்கு வந்து எதிரியை சிகிச்சைக்கு சேர்த்து எதிரியின் மாமா என் மீதும், என்னுடைய ஆட்கள் மீதும் அன்றைய தினமே காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் மீது உள்ள புகாரில் இருந்து தப்பிக்க நடக்காத ஒரு சம்பவத்தை குறிப்பிட்டு எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என் வீட்டிற்கு வரவில்லை என்றாலும், என்னை அதிகமாக பேசவில்லை என்றாலும், என்னை ஆயுதத்தால் தாக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி சூரி கத்தி எடுத்து வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரி என் உடம்பில் காயம் ஏற்படுத்தியதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

6) **நான் சொல்லும் தேதியில், சொல்லும் நேரத்தில் எதிரியால் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னுடைய பனியனை கிழித்ததாக வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அது போன்று என்ற ஒரு சான்றும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் நான் சொல்லும் விபரம் பொய்யானது என்றால் சரியல்ல. என் இளைய சகோதரர் திருமலை என்பவரால் ஜோடிக்கப்பட்ட புகாரின் பெயரில் எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை : இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.19 16:38:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 70/2022 LW- 2 PW- 2

Name : விஜயலெட்சுமி ( கண்ணுற்ற சாட்சி)

Father's/Husband's Name : ஸ்ரீதர்

Village : பன்னியாமலை

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 46/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் கணவரின் தம்பி ஆவார். ஆஜர் எதிரி ஜெயச்சந்திரன் என்பவரை தெரியும். கடந்த 07.05.2020ம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் எங்கள் வீட்டு போர்டிகோவில் எதிரி அத்துமீறி நுழைந்து அசிங்கமாக பேசி வெளியே வாங்கடி உங்களை குடும்பத்துடன் அழிக்கப் போகிறேன் என்று கத்தியை எடுத்து அ.சா.1ஐ குத்த வந்தார். அப்போது சுரேஷ் வெளியே வந்ததும் சுரேசை கத்தியால் குத்தி சாதாரண காயம் ஏற்படுத்தினார். அப்போது அங்கிருந்த நாய்க்கும், நாய் தொடை அருகே ரத்தக் காயம் ஏற்பட்டது. நாய் இல்லையென்றால் சுரேசை அதிகமாக காயப்படுத்தியிருப்பார். பின்னர் அ.சா.1ஐ மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை எடுத்துக் கொண்டார். மறுநாள் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u> :

2) அ.சா.1 சுரேஷ் வீட்டிற்கு மேற்கு பக்கம் என் வீடு உள்ளது. எனது வீட்டின் தலைவாசல் மேற்கு பக்கம் பார்த்து உள்ளது. சம்பவ சமயம் எனது கணவர் ஸ்ரீதர் மதுபோதையில் தூங்கிக் கொண்டிருந்தார். சம்பவ சமயம் நான் என் வீட்டில் இருந்தேன். மூன்றாம் நபர் வீட்டிற்குள் வந்தால் நாங்கள் வளர்க்கும் நாய் குறைக்கும் என்றால் சரிதான். பொதுவாக நாய் குறைத்தால் வெளியே சென்று பார்ப்போம் என்றால் சரிதான். என் வீட்டில் போர்டிகோ அல்லது அதற்கு அடுத்து அறை உள்ளது அந்த அறையில்தான் நான் தூங்கிக் கொண்டிருந்தேன். எதிரி கத்தும் சத்தம் கேட்டும், நாய் குறைக்கும் சத்தம் கேட்டும் வந்து பார்த்தேன். நான் பார்த்த பொழுது எதிரி கையில் கத்தியுடன் இருந்தார். போலீசார் விசாரணையில் எதிரி கையில் கத்தியுடன் இருந்த விபரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரி கத்தியை வைத்து கிழித்ததில் சுரேஷுக்கு வயிற்றில் கீறிய காயம் இருந்தது.

3) நான் சொல்வது போல் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரி எங்கள் வீட்டிற்கு வரவில்லை என்றாலும், அசிங்கமான வார்த்தைகளால் பேசவில்லை என்றாலும், எதிரியால் காயம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியின் மாமா புகார் கொடுத்ததன் பேரில் என் கணவர் மீதும் அ.சா.1 மற்றும் அவரது சகோதரர்கள் மீதும் இதே நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். மேற்படி எதிரியின் மாமா கொடுத்த புகார் மற்றும் வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் வளர்க்கும் நாய்க்கு எதிரியால் காயம் ஏற்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்லும் சாட்சியத்தில் உண்மை இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.19 16:38:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.70/2022

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 70/2022 LW- 3 PW- 3

Name : நாச்சம்மாள் ( கண்ணுற்ற சாட்சி)

Father's/Husband's Name : முத்தழகு

Village : பன்னியாமலை

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 60/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் மகன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் ராஜா என்பவரின் தங்கச்சி மகனாவார். சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு 10.00 மணிக்கு மேல் என் மகன் அ.சா.1ன் வீட்டிற்குள் ஆஜர் எதிரி வந்து தேவடியா, அவளே, இவளே என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசி கத்தியால் என் மகனை குத்திவிட்டு நாங்கள் ஓடிவந்ததும், வண்டியை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். என் மகனுக்கு முதுகில் காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் என் மகனை நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

2) அ.சா.1ன் வீடு எனது வீட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். அ.சா.2ன் தாயார் பெயர் நாச்சம்மாள். போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்ததாக சொல்வது பொய் என்றாலும் எனது மகன் ஜோடித்து என்னை சாட்சியாக அழைத்து வந்துள்ளார் என்றாலும் சரியல்ல. எதிரியால் என் மகனுக்கு காயம் ஏற்படவில்லை என்றாலும் வழக்கிற்காக காயம் ஏற்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவம் ஆனது என் மகன் திருமலை என்பவரால் பொய்யாக ஜோடிக்கப்பட்ட புகாரை தொடர்ந்து எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரி அசிங்கமான வார்த்தைகளால் பேசவில்லை என்றாலும் எதிரியின் மாமா ராஜா என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் என் மகன்கள் மீது பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கில் இருந்து தப்பிக்க எதிரி மீது பொய் புகார் கொடுக்கப்பட்டு அதற்கு ஆதரவாக பொய் சாட்சி நாங்கள் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு பற்றிய விபரம் எதுவும் தெரியாது என்றாலும் என் மகன் என்னை அழைத்து வந்து அ.சா.2ன் தாயாரான நாச்சம்மாள் (பட்டியல் சாட்சி–3) என்ற பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.19 16:39:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.70/2022

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 70/2022 | LW- 4 | PW- 4 |

Name : விஜயகுமாரி ( பார்வை மகஜர் சாட்சி)

Father's/Husband's Name : சுரேஷ்

Village : பன்னியாமலை

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 37/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் கணவர். ஆஜர் எதிரியை தெரியும். அவர் என் ஊர்காரர். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள முதலாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையது தான். சுமார் 07.05.2020ம் தேதி புகார் கொடுத்த பின் 2, 3 நாட்கள் கழித்து போலீசார் எங்கள் வீட்டிற்கு வந்து எங்களை விசாரித்து சாட்சியாக கையொப்பம் கேட்டதன்பேரில் நான் கையொப்பம் செய்தேன். (**பார்வை மகஜரிலுள்ள முதலாவது சாட்சிக் கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

2) நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் உள்ள விபரங்களை என்னிடம் படித்து காண்பித்தார்கள் தற்போது

**ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்து மூன்று, நான்கு நாட்கள் கழித்து காலை சுமார் 11:00 மணிக்கு மேல் இரண்டு போலீசார் வந்தார்கள். 11.00 மணிக்கு போலீசார் என்னை பார்க்க வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு சென்று விட்டார்கள் காலை 9.00 மணிக்கு பள்ளிக்கூடம் சென்று விடுவார்கள். போலீசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. ஆய்வாளர், சார்பு ஆய்வாளர் யார் என்று அடையாளம் காண தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 எனது கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை : இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.19 16:39:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்